year 6 2019:Layout 1 06/05/2019 11:21 Page 1

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2019
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

அ ) 216 ☐ ஆ ) 247 ☐
இ ) 30 ☐ ஈ ) 18 ☐

2. படர்க்கை இடத்தைக் குறிக்கும் சொல்

அ ) வரைகின்றான் ☐ ஆ ) வரைகிறாய் ☐
இ ) வரைவாய் ☐ ஈ ) வரைகிறேன் ☐

3. மௌ என்ற எழுத்து

அ ) உயிர் எழுத்து ☐
ஆ ) உயிர்மெய் எழுத்து ☐
இ ) மெய் எழுத்து ☐
ஈ ) ஆய்த எழுத்து ☐

4. யாழ்ப்பாணத் தமிழரசின் கொடி

அ ) நந்திக்கொடி ☐ ஆ ) விற்கொடி ☐
இ ) மீன்கொடி ☐ ஈ ) வீணைக்கொடி ☐

5. துட்டகெமுனுவுக்குப் பெற்றோர் இட்ட பெயர்

அ ) அசேலன் ☐ ஆ ) சூரத்தீசன் ☐
இ ) காமினிஅபயன் ☐ ஈ ) காகவனத்தீசன் ☐

6. **பழமொழி:** பானையில் இருந்தால்தானே________ வரும்.

அ ) கையில் ☐ ஆ ) அகப்பையில் ☐
இ ) சட்டியில் ☐ ஈ ) வட்டிலில் ☐

7. இலங்கையில் காகித ஆலை அமைந்துள்ள இடம்

அ ) திருகோணமலை ☐ ஆ ) மட்டக்களப்பு ☐

இ ) வாழைச்சேனை ☐ ஈ ) கொழும்பு ☐

8. பறம்புமலையை ஆண்ட மன்னன்

அ ) பாரி ☐ ஆ ) காரி ☐

இ ) குமணன் ☐ ஈ ) செங்கணான் ☐

9. ஒரு பொருளின் பகுதியை அல்லது உறுப்பைக் குறிப்பது

அ ) தொழிற்பெயர் ☐ ஆ ) சினைப்பெயர் ☐

இ ) குணப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

10. பிறரின் உழைப்பில் வாழ்பவர் ________ ப் போன்றவர்.

அ ) எலியை ☐ ஆ ) புலியை ☐

இ ) பன்றியை ☐ ஈ ) பூனையை ☐

11. இலங்கைத் தீவு____________________ அமைந்துள்ளது.

அ ) இந்துமாக் கடலில் ☐ ஆ ) பசுபிக் கடலில் ☐

இ ) அத்திலாந்திக்கடலில் ☐ ஈ ) வங்காளக்கடலில் ☐

12. நானூறு + ஐம்பது

அ ) நானூறைம்பது ☐ ஆ ) நானூற்றைம்பது ☐

இ ) நானூறம்பது ☐ ஈ ) நானூறுஐம்பது ☐

13. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி

அ ) பண்பாடு ☐ ஆ ) நாகரிகம் ☐
இ ) உயர்வு ☐ ஈ ) ஒழுக்கம் ☐

14. எதிர்கால இடைநிலைகள்

அ ) இன், ன் ☐ ஆ ) கிறு ,கின்று ☐
இ ) ட, த், ற் ☐ ஈ ) ப், வ் ☐

15. “ஏலேலோ ஐலசா” எனத் தொடங்கும் பாடல்

அ ) ஏர்ப்பாடல் ☐ ஆ ) காதற்பாடல் ☐
இ ) மீனவர்பாடல் ☐ ஈ ) தாலாட்டுப்பாடல் ☐

16. கானகம் என்பது

அ ) காடு ☐ ஆ ) நாடு ☐
இ ) வீடு ☐ ஈ ) தோட்டம் ☐

17. இவை + ஐ

அ ) இதையை ☐ ஆ ) இவைற்றை ☐
இ ) இவற்றை ☐ ஈ ) இதை ☐

18. சங்கிலிமன்னனைச் சிறைப்பிடித்தவர்கள்

அ ) ஆங்கிலேயர் ☐ ஆ ) போர்த்துக்கேயர் ☐
இ ) ஒல்லாந்தர் ☐ ஈ ) சிங்களவர் ☐

19. மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுவது

அ ) தை முதலாம் நாள் ☐

ஆ ) தை இரண்டாம் நாள் ☐

இ ) சித்திரை முதலாம் நாள் ☐

ஈ ) சித்திரை இரண்டாம் நாள் ☐

20. கழனி என்பது

அ ) கலப்பை ☐ ஆ ) வயல் ☐

இ ) வானம் ☐ ஈ ) கடல் ☐

21. குடிமக்கள் மன்னனின் ________________ நோக்கி வாழ்வர்.

அ ) செங்கோலை ☐ ஆ ) தலைக்கோலை ☐

இ ) கொடுங்கோலை ☐ ஈ ) கோலை ☐

22. செயலை உணர்த்துவது

அ ) பெயர்ச்சொல் ☐ ஆ ) இடைநிலை ☐

இ ) எழுவாய் ☐ ஈ ) வினைச்சொல் ☐

23. ‘‘பட்டினி கிடந்து பசியால் மெலிந்து’’ என்ற பாடலை எழுதிய கவிஞர்

அ ) பெருஞ்சித்திரனார் ☐ ஆ ) காசிஆனந்தன் ☐

இ ) ஔவையார் ☐ ஈ ) பாவேந்தர் ☐

24. பேரூர் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) பேர் + ஊர் ☐ ஆ ) பெருமை + ஊர் ☐

இ ) பே + ஊர் ☐ ஈ ) பேரு + ஊர் ☐

25. **குறள் :** சொலல்வல்லன் சோர்விலன் ____________ அவனை
மிகல்வெல்லல் யார்க்கும் அரிது

அ ) அஞ்சான் ☐ ஆ ) துஞ்சான் ☐
இ ) கெஞ்சான் ☐ ஈ ) மிஞ்சான் ☐

26. மன்னார்க் கடலில் முத்துக்குளிக்கும் உரிமை பெற்ற அரசு

அ ) கண்டியரசு ☐ ஆ ) கோட்டையரசு ☐
இ ) வன்னியரசு ☐ ஈ ) யாழ்ப்பாண அரசு ☐

27. "தாயைவிட இனியது" எனக் காசிஆனந்தன் கூறுவது

அ ) வடமொழியை ☐ ஆ ) தமிழ்மொழியை ☐
இ ) ஆங்கிலமொழியை ☐ ஈ ) சீனமொழியை ☐

28. நுண்ணுயிர்களை முதன்முதல் உலகிற்கு அறிமுகம் செய்தவர்

அ ) எடிசன் ☐ ஆ ) கலிலியோ ☐
இ ) வன்லீவன்குக் ☐ ஈ ) மார்க்கோனி ☐

29. முன் நிற்பவரைக் குறிக்கும் இடவகை

அ) படர்க்கை ☐ ஆ ) தன்மை ☐
இ ) மூவிடம் ☐ ஈ ) முன்னிலை ☐

30. யாழ்ப்பாண அரசு ____________ நூற்றாண்டு வரை வலுவுடன் நிலைத்து நின்றது.

அ ) 17ஆம் ☐ ஆ ) 16ஆம் ☐
இ ) 18ஆம் ☐ ஈ ) 19ஆம் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முன்பு தமிழகமும் ஈழமும் செல்வச் செழிப்பு மிக்க நாடுகளாக விளங்கின. அதனால், தமிழரின் நாடுகளை நோக்கி உலக வணிகர்கள் வந்தனர். இவர்களுடனான வணிகத்தினால் பல பட்டினங்கள் புகழ் பெற்றுவிளங்கின. அவற்றுள் ஒன்று மாதோட்டம். மாதோட்டத்தில் செல்வச் செழிப்பைக் காட்டும் வளமனைகளும் அவற்றைச் சூழ்ந்து பூங்காக்களும் மிகுந்திருந்தன. போக்குவரத்துக்காக அகன்ற பெரிய வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. வெப்ப மிகுதியினால் ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒருபுறம் பன்மொழிப் பேச்சொலிகளும் மறுபுறம் திருக்கேதீச்சுரத்தில் இருந்து இறையன்புப் பாடல்களின் ஒலியும் கேட்கும். இத்தன்மை வாய்ந்த அழகுகளால் புகழ் பூத்திருந்தது மாதோட்டம்.

1. முன்பு செல்வச் செழிப்புமிக்க நாடுகளாக விளங்கியவை எவை ?

______________________________________________

______________________________________________

2. அகன்ற பெரிய வீதிகள் எதற்காக அமைக்கப்பட்டிருந்தன ?

______________________________________________

______________________________________________

3. தமிழரின் நாடுகளை நோக்கி வந்தவர்கள் யார்?

______________________________________________

4. வெப்ப மிகுதியினால் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தவை எவை ?

______________________________________________

5. எங்கிருந்து இறையன்புப் பாடல்களின் ஒலி கேட்கும்?

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சங்கிலியன் சிலை அமைந்துள்ள இடம் எது?

______________________________

2. கணைக்கால் இரும்பொறையும் செங்கணானும் ஆண்ட நாடுகள் எவை?

   கணைக்கால் இரும்பொறை ______________________________

   செங்கணான் ______________________________

3. பாரி மகளிரின் பெயர்கள் எவை? அவர்களிடம் மழையில் நனைந்தபடி வந்தவர் யார்?

______________________________

______________________________

4. கவிமணி என்ற பட்டத்தை, தேசிக விநாயகம்பிள்ளைக்கு வழங்கியவர் யார்?

______________________________

______________________________

5. ஐரோப்பியர் இலங்கையை வந்தடைந்தபோது நிலவிய அரசுகள் எவை?

______________________________

______________________________

6. நாட்டார் என்ற சொல் குறிப்பது யாரை ?

______________________________

7. நுண்ணுயிரிகளால் ஏற்படும் தீமைகள் இரண்டு தருக.

______________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## நற்பழக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| மறவாத | கற்றிட | தூய்மை | விழித்து | வேண்டும் |

அதிகாலையில் ____________________ எழுகின்ற

பழக்கம் வேண்டும் !

ஆண்டவனை எந்நாளும் ________________

உள்ளம் வேண்டும் !

இதயத்தில் ________________ ஒன்றையே

எண்ணல் வேண்டும் !

ஈகையினை சிறு அகவையில்

பேணல் ____________________ !

எழுகின்ற செங்கதிர் போல்

எந்நாளும் ____________________ வேண்டும் !

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. மெய் எழுத்துகள் எத்தனை? ______________________

   உயிர் எழுத்துகளின் வகைகள் எவை ?

   ______________________

2. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   ஒருமை ______________ பெண்பால் ______________

   குணப்பெயர் ______________ பலவின்பால் ______________

   காலப்பெயர் ______________ அஃறிணை ______________

3. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   இறந்தகால வினைமுற்று ______________________

   நிகழ்கால வினைமுற்று ______________________

   எதிர்கால வினைமுற்று ______________________

4. கீழுள்ள சொல்லியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை நிரற்கூட்டில் எழுதுக.

   1. விளையாட்டு உடலுக்கு உறுதியைத் தருகின்றது.

   2. மூதுரையை எழுதியவர் ஔவையார்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |

5. தொடர்ச்சொல்லியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக .

   ______________________

புள்ளிகள் 15

**6) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

எனது பொழுதுபோக்குகள் நூல்கள் வாசித்தல், நண்பர்களுடன் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல், கணினியில் விளையாடுதல் போன்றன. நாங்கள் நேரம் கிடைக்கும்போது பொழுதுபோக்குகளில் ஈடுபட வேண்டும். இவை எமக்கு மகிழ்ச்சியையும் அறிவையும் தரும்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்ப்பாணத் தமிழரசு
- பாரி மகளிர்
- பிறந்தநாள் விழா
  - யாருடைய பிறந்தநாள்
  - பிறந்தநாள் நடைபெற்ற இடம், நேரம், காலம்
  - விழாவில் பங்குபற்றியவர்கள் (உணவுகள், பரிசுப் பொருட்கள்)
  - விழா முடிவு

புள்ளிகள் 20

year 6 2019:Layout 1  06/05/2019  11:21  Page 14